தேர்வு நாள்: 08.05.2022 **TEST - 15 (ECONOMICS FULL TEST)** நேரம்: 180 நிமிடங்கள்

**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 24 - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) சுதந்திரத்திற்குப் பின்னர் நமது நாட்டின் முதலாவது தொழிற்கொள்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 1948 B) 1956 C) 1973 D) 1977

2) தொழில்மயமாக்கல் தொடர்பாக நமது அரசுகள் மேற்கொண்ட முன் முயற்சிகள் காரணமாக இன்று இந்தியா உலகின் எத்தனையாவது பெரிய தொழிற்துறை நாடாக வளர்ந்துள்ளது?

A) ஆறாவது B) எட்டாவது C) பத்தாவது D) பதிமூன்றாவது

3) திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தபோது இந்தியாவின் நிதி அமைச்சராகப் பணியாற்றியவர்?

A) டாக்டர் சுப்ரமணியன் சுவாமி B) டாக்டர் ரகுராம் ராஜன்

C) டாக்டர் மன்மோகன் சிங் D) டாக்டர் யஷ்வந்த் சிங்

4) கட்டாயம் உரிமம் பெறவேண்டிய தொழில்களின் பட்டியலில் இருந்து 1993இல் விடுவிக்கப்பட்ட மூன்று தொழிகளில் சேராதது எது?

A) மோட்டார் வாகனங்கள் B) வெள்ளை பொருள்கள்

C) காப்புரிமைப் பெற்ற தோல் பொருள்கள் D) கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருள்கள்

5) போட்டிச் சட்டம் 2002, மீண்டும் திருத்தப்பட்டது எப்போது?

A) 2003 & 2005 B) 2004 & 2006 C) 2006 & 2008 D) 2007 & 2009

6) பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரி எது?

A) நேர்முக வரி B) மறைமுக வரி

C) A & B D) மேற்கண்ட எதுவுமில்லை

7) “வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாகச் செலுத்த வேண்டியதே வரி" - என்றவர் யார்?

A) பேராசிரியர் ஹெஹல் B) பேராசிரியர் சி.என்.ஆர் ராவ்

C) பேராசிரியர் ஜே.எஸ்.மில் D) பேராசியர் செலிக்மேன்

8) 1978இல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நீக்கப்பட்ட பிறகு, 1978 முதல் 1979 வரையிலான ஓராண்டிற்கு செயல்படுத்தப்பட்ட திட்டம் எது?

A) விடுமுறைத் திட்டம் B) சுழல் திட்டம்

C) கரிபி ஹேட்டோ திட்டம் D) இணைப்புத் திட்டம்

9) எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் முதன்முறையாக பொதுத் துறைக்கும் மேலாக, தனியார் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது?

A) 7வது ஐந்தாண்டுத் திட்டம் B) 8வது ஐந்தாண்டுத் திட்டம்

C) 9வது ஐந்தாண்டுத் திட்டம் D) 10வது ஐந்தாண்டுத் திட்டம்

ETW ACADEMY

10) கலப்புப் பொருளாதாரம் என்பதன் பொருள்?

A) பொதுத் துறையும் பணிகள் துறைந்தும் இணைந்து செயல்படுவது

B) பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படுபது

C) தனியார் துறையும் வெளிநாட்டு அமைப்புகளும் இணைந்து செயல்படுவது

D) பொதுத் துறையும், மக்களும் இணைந்து செயல்படுவது

11) உலகப் பொருளாதாரத்தில், வாங்கும் சக்தியின் அடிப்படையில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?

A) ஆறாமிடம் B) மூன்றாமிடம் C) எட்டாமிடம் D) ஐந்தாமிடம்

12) உலகளவில் நிலக்கரி உற்பத்தியில் இந்தியா வகிக்கும் இடம் எது?

A) முதலிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

13) பொது செலவை பின்வரும் எந்த மூன்று இனங்களுக்கு செலவிடுமாறு வள்ளுவர் வலிறுத்துகிறார்

A) பாதுகாப்பு, பொதுப் பணிகள் மற்றும் சமூகப் பணிகள்

B) பாதுகாப்பு, பொதுப்பணிகள் மற்றும் உணவு

C) பாதுகாப்பு, சமூகப் பணிகள் மற்றும் உணவு

D) உணவு, பொதுப் பணிகள் மற்றும் வேளாண்மை

14) திருவள்ளுவர் பின்வரும் எப்பொருளாதாரத்தையே வலியுறுத்தினார்

A) தற்சார்பு பொருளாதாரம் B) கலப்புப் பொருளாதாரம்

C) தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை D) இவையனைத்தும்

15) காந்தியப் பொருளாதாரம் எதை அடிப்படையாகக் கொண்டது

A) தற்சார்பு B) நன்நெறி C) உணர்வெழுச்சி D) கிராமம்

16) இந்திய கைவினை பொருட்களின் நசிவு காலம் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I) பாகுபாடான சுங்க வாரிக்கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே இந்தியக் கைவினை பொருட்களை அழித்தது.

II) நவாப் மற்றும் அரசர்கள் காலம் முடிவுக்கு வந்தவுடன், இந்திய கைவினைப் பொருட்களை காப்பாற்ற எவருமில்லாத நிலை ஏற்பட்டது.

III) இந்தியாவில் தந்தி சேவை அறிமுகம் ஆனப்பின் பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது.

A) I, II மட்டும் சரி B) II, III மட்டும் சரி C) I, III மட்டும் சரி D) எல்லாமே சரி

17) கீழ்க்காணும் எந்த ஆண்டின் தொழில் கொள்கை பொதுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தது?

A) 1948ஆம் ஆண்டு தொழிற்கொள்கை B) 1956ஆம் ஆண்டு தொழிற்கொள்கை

C) 1977ஆம் ஆண்டு தொழிற்கொள்கை D) 1991ஆம் ஆண்டு தொழிற்கொள்கை

18) TISCO தொழிற்சாலை 1919 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இடம் எது?

A) காரக்பூர் B) பகல்பூர் C) நாக்பூர் D) பான்பூர்

ETW ACADEMY

19) இயற்கையான பட்டு தயாரிப்பில் உலக அளவில் இந்தியா எந்த இடம் வகிக்கிறது?

A) முதலாம் இடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

20) இந்தியாவில் உள்ள மொத்த வங்கிகளில் ____________பொதுத்துறை வங்கிகள் ஆக உள்ளன.

A) 71.4 சதவீத வங்கிகள் B) 74.5 சதவீத வங்கிகள்

C) 72.9 சதவீத வங்கிகள் D) 73.7 சதவீத வங்கிகள்

21) கீழ்காணும் எந்த இடத்தில் அமைந்துள்ள பொதுத்துறை எஃகு நிறுவனம், எந்த ஒரு நாட்டின் உதவியும் இல்லாமல் இந்திய அரசால் உருவாக்கப்பட்டது?

A) துர்காபூர் B) விசாகப்பட்டினம்

C) பொகாரோ D) சேலம்

22) 1956 தொழில் கொள்கை தீர்மானத்தின்படி எத்தனை தொழில்கள் மாநிலங்களின் முற்றுரிமையின் கீழ் கொண்டுவரப்பட்டன

A) 17 B) 12 C) 24 D) 15

23) **கூற்று:** 1992-ம் ஆண்டு, இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

**காரணம்:** ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை இந்தியா சந்தித்தது. எனவே இந்தியா புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுவர வேண்டியிருந்தது

A) கூற்றும் காரணமும் சரி; மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

B) கூற்று சரி; ஆனால் காரணம் தவறு

C) கூற்று தவறு; ஆனால் காரணம் சரி

D) கூற்றும் காரணமும் தவறு

24) பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (The Pradhan Mantri Fasal Bia) அறிமுகப்படுத்தப்பட்டது எப்போது?

A) 14 செப்டம்பர் 2016 B) 15 ஆகஸ்ட் 2015

C) 18 பிப்ரவரி 2016 D) 22 டிசம்பர் 2015

25) பொருளாதாரப் போட்டி நடைமுறைகளைக் கண்காணிக்க, போட்டிக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு என்ன?

A) 1991 B) 1996 C) 2010 D) 2005

26) ராஜா செல்லையா குழு இறக்குமதிக்கான தீர்வைகளை, உச்ச அளவாக எத்தனை சதவீதம் குறைக்க பரிந்துரைத்துள்ளது?

A) 40 % B) 50 % C) 60 % D) 35 %

27) பின்வரும் எந்த சட்டத்தின்படி இந்திய ரிசர்வ் வங்கி துவங்கப்பட்டது?

A) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1932

B) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1933

C) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934

D) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1935

ETW ACADEMY

28) இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்பட காரணம் என்ன?

1. இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது
2. அவைகளின் வைப்புக்களை ஏற்கிறது
3. மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்கிறது
4. இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து பொதுத்துறை வங்கிகளுக்கு மட்டும் தலைமை வங்கியாகும்.

A) 1, 2 & 4 B) 2, 3 & 4 C) 1, 3 & 4 D) 1, 2 & 3

29) ஒரு குறுகிய அளவில் பார்க்கும்பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும், திரும்பப் பெறுவதும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) வெளிச்சந்தை நடவடிக்கைகள் B) உள்சந்தை நடவடிக்கைகள்
C) கடன் பத்திர நவடிக்கைகள் D) மேற்கண்ட அனைத்தும்

30) நபார்டு வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1982 ஜூலை B) 1980 ஜூலை C) 1984 ஜூலை D) 1986 ஜூலை

31) நபார்டு வங்கியின் மூலதனத்தை சரி பகுதிகளாக வழங்குபவை எவை?

A) மத்திய மற்றும் மாநில அரசுகள்
B) இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய அரசு
C) இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் மாநில அரசுகள்
D) மேற்கண்ட அனைத்தும்

32) இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டு கழகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) நபார்டு வங்கி B) ஐசிஐசிஐ வங்கி C) எஸ்பிஐ வங்கி D) ஐடிபிஐ வங்கி

33) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியானது எப்போது முதல் இந்திய அரசிற்கு சொந்தமான தன்னாட்சி பெற்ற ஒரு கழகமாக மாறியது?

A) மார்ச் 1 1976 B) பிப்ரவரி 15 1976 C) பிப்ரவரி 16 1976 D) ஏப்ரல் 1 1976

34) அனைத்து வங்கி வேலைநாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரை மொத்தம் எத்தனை தொகுப்புகளாக நெ.ஃப்ட் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன?

A) 24 B) 23 C) 35 D) 27

35) மாநில தொழில் நிதிக் கழக சட்டமானது இந்திய அரசால் எப்போது இயற்றப்பட்டது?

A) 1951 B) 1950 C) 1956 D) 1982

36) பின்வரும் எந்தத் தொழிற்கொள்கைத் தீர்மானத்தின் மூலம், சிறு தொழில்கள்துறையானது, குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் வீட்டுத் தொழில்கள் என பிரிக்கப்பட்டன?

A) மூன்றாவது, 1973 B) ஐந்தாவது, 1980
C) நான்காவது, 1977 D) ஆறாவது 1991

ETW ACADEMY

37) 1980 தாராளவாதக் கொள்கையால் பின்வரும் எந்த சட்டத்தின் பிடியிலிருந்து பெரும் நிறுவனங்கள் விடுவிக்கப்பட்டன?

A) ஏகபோகக் கட்டுப்பாட்டுச் சட்டம் (MRTP) B) அந்நிய செலவாணிச் சட்டம்
C) A & B D) மேற்கண்ட ஏதுமில்லை

38) வரி விதிப்புக் கொள்கைகள் சில பொதுவான விதிகளை சார்ந்தவை. அந்த விதிகளில் சேராதது எது?

A) சமத்துவ விதி B) வளர்ச்சி விதி
C) உறுதி விதி D) சிக்கன மற்றும் வசதி விதி

39) 1860இல் இந்தியாவில் முதன் முதலாக வருமான வரியை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) சர் ஜேம்ஸ் வில்சன் B) சர் ஜோன்ஸ் சால்க்
C) சர் ஜோஹன்னஸ் குட்டென்பெர்க் D) சர் இண்டியானா ஜோன்ஸ்

40) சொத்துக்களுக்கான வரி யாரால் வசூலிக்கப்படுகிறது?

A) மத்திய அரசால் B) மாநில அரசால்
C) உள்ளாட்சி அமைப்பால் D) A & B

41) பண்டங்கள் மற்றும் பணிகள் வரியானது என்று முதல் அமல்படுத்தப்பட்டது?

A) மார்ச் 29, 2017 B) ஜூன் 1, 2017
C) ஜூலை 1, 2017 D) ஆகஸ்ட் 1, 2017

42) சுத்தமான பணச்செயல்பாடு (Operation of Money) எப்போது தொடங்கியது?

A) ஜனவரி 1, 2017 B) ஜனவரி 31, 2017
C) மார்ச் 31, 2017 D) ஏப்ரல் 1, 2017

43) 2003 ஆம் ஆண்டில் எந்த இந்திய மாநிலத்தில் முதன்முதலில் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது?

A) பஞ்சாப் B) தமிழ்நாடு
C) மேற்கு வங்கம் D) ஹரியானா

44) வரிக்கு வரி எனபது?

A) செஸ் B) கூடுதல் கட்டணம்
C) ஜி.எஸ்.டி D) மேற்கண்ட அனைத்தும்

45) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
B) நிகர தேசிய உற்பத்தி (NNP)
C) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**46)** 2012ஆம் ஆண்டில், வறுமை விகிதத்தை 15 சதவீதமாகக் குறைக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்த ஐந்தாண்டுத் திட்டம் எது?

A) 9வது ஐ.திட்டம்: 1997-2002
B) 10வது ஐ.திட்டம்: 2002-2007
C) 11வது ஐ.திட்டம்: 2007 – 2012
D) 12வது ஐ.திட்டம் 2012-2017

**47)** பின்வருவனவற்றுள் எது ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனை அல்ல?

A) பொருளாதாரத்தை விரிவுபடுத்தியது
B) தேசிய வருமானத்திலும் தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி
C) தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரிப்பு
D) அதிகஅளவில் ஒருமுகப்படுத்தப்பட்டப் பொருளாதாரம்

**48)** 2017ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இணையதள சேவையை அதிக அளவு பயன்படுத்தும் பயனாளர்களைக் கொண்டுள்ள நாடுகளின் வரிசையில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம்
B) இரண்டாமிடம்
C) மூன்றாமிடம்
D) நான்காமிடம்

**49)** மக்கள் தொகை அதிகரிக்க துவங்கியதால் “பெரும் பிரிவினை ஆண்டு” என அழைக்கப்படும் ஆண்டு எது?

A) 1951
B) 1981
C) 1931
D) 1921

**50)** காந்தியடிகள்

A) உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்
B) வீடுகளிலேயே கூட உற்பத்தி நடைபெற வேண்டும் என்று விரும்பினார்
C) கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்
D) இவை அனைத்தும்

**51)** பின்வரும் கூற்றுகளில் சரியானது எது

A) அம்பேத்கர் மிகச்சிறந்த பொருளியல் அறிஞர்
B) சட்டம் மற்றும் அரசியலில் அம்பேத்கரது அளப்பரிய பங்களிப்புகள் அவருடைய பொருளாதார பங்களிப்பை குறைத்து காட்டி விட்டன
C) எல்லாவற்றுக்கும் மேலாக அம்பேத்கர் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதி
D) இவை அனைத்தும்

**52)** ஊரக தொழிற்சாலைகள் என்பவை?

A) ஊரக பகுதிகளில், ஊரக மக்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகள்
B) ஊரக பகுதிகளில், அரசால் நடத்தப்படும் தொழிற்சாலைகள்
C) ஊரக பகுதிகளில், ஊரக மக்கள் அல்லாதோரால் நடத்தப்படும் தொழிற்சாலைகள்
D) மேற்கண்ட அனைத்தும்

**53)** இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் குறு கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையாக இருந்தது என திரிபாதி அறிக்கை 2014 கூறுகிறது?

A) 100
B) 150
C) 200
D) 250

ETW ACADEMY

54) சிறிய அலகு முன்னேற்றம் மற்றும் மறுநிதியளிக்கும் முகவர் வங்கி (MUDA) எப்போது துவங்கப்பட்டது?

A) ஏப்ரல் 8, 2014 B) ஏப்ரல் 8, 2015

C) ஏப்ரல் 8, 2016 D) ஏப்ரல் 8, 2017

55) அரசின் பணம், பண அளிப்பு மற்றும் வட்டி விகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் எது?

A) இந்திய ரிசர்வ் வங்கி B) வங்கியல்லாத நிதி நிறுவனங்கள்

C) வணிக வங்கிகள் D) மேற்கண்ட எதுவுலில்லை

56) துவக்கத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் மூலதனம், எவ்வளவு ரூபாய் மதிப்பு கொண்ட சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தனியார் வசம் இருந்தன?

A) ரூ 25 B) ரூ 1000 C) ரூ 50 D) ரூ 100

57) ரௌப்பியா என்ற சொல்லிலிருந்து ரூபாய் என்கின்ற வார்த்தை தோன்றியது. ரௌப்பியா என்பது எம் மொழி சொல்லாகும்?

A) இந்தி B) சமஸ்கிருதம் C) பாரசீகம் D) உருது

58) வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிவர்த்தனைகளை தனது எத்தனை தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது?

A) 14 B) 12 C) 13 D) 15

59) கடன் கட்டுப்பாட்டு முறைகள், பின்வரும் எச்சட்டத்தின் அடிப்படையில் சட்டபூர்வ அங்கீகாரத்தினை பெறுகிறது?

A) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 B) வங்கி நெறிமுறைச் சட்டம், 1949

C) வங்கிகள் இணைப்புச் சட்டம், 1956 D) A & B

60) பணவியல் கொள்கையின் ஒரு முக்கிய கருவியான "மாறும் ரொக்க இருப்பு விகிதத்தை" முதன்முதலாகப் பரிந்துரைத்தவர் யார்?

A) அம்பேத்கர் B) ஜே.சி. குமரப்பா C) வீ.கே. ராவ் D) கீன்ஸ்

61) கிராமப்புற முன்னேற்றத்திற்காக கடன்களை விரிவுபடுத்தும் நோக்கில் இந்திய ரிசர்வ் வங்கியால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு எது?

A) இந்திய தொழில் நிதிக் கழகம் B) இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம்

C) நபார்டு வங்கி D) வட்டார ஊரக வங்கிகள்

62) நபார்ட் என்பதன் தமிழ் விரிவாக்கம் என்ன?

A) விவசாயம் மற்றும் ஊரக மேம்பாட்டுக்கான தேசிய வங்கி

B) விவசாயம் மற்றும் தொழில் மேம்பாட்டிறகான தேசிய வங்கி

C) விவசாயம் மற்றும் சிறு தொழில் மேம்பாட்டுக்கான தேசிய வங்கி

D) விவசாயம் மற்றும் தொழில் மேம்பாட்டுக்கான கடன் கொடுக்கும் வங்கி

ETW ACADEMY

63) நபார்டு வங்கியின் தலைவராக பதவி வகிப்பவர் யார்?

A) இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
B) பிரதமர்
C) தலைமை கணக்கு தணிக்கை அலுவலர்
D) ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர்

64) கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும்பொருட்டு மாநில அரசுகளுக்கு எத்தனை வருட நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது?

A) 10 ஆண்டு
B) 20 ஆண்டு
C) 15 ஆண்டு
D) 12 ஆண்டு

65) இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டு கழகம் ஒரு நிறுவனமாக எப்போது தோற்றுவிக்கப்பட்டது?

A) 1955 ஜனவரி 5
B) 1950 மார்ச் 1
C) 1949 ஜனவரி 31
D) 1948 டிசம்பர் 6

66) வங்கிகள் உள்ளிட்ட தொழில் கடன்கள் வழங்கும் பல்வேறு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் ஒரு தலைமை நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் என்ற முதன்மை நோக்கத்தின் அடிப்படையில் துவங்கப்பட்ட அமைப்பு எது?

A) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி
B) இந்திய தொழில் கடன் மற்றும் மேம்பாட்டு கழகம்
C) இந்திய ரிசர்வ் வங்கி
D) மாநில நிதி கழகங்கள்

67) பரிவர்த்தனைக்காக காத்திருக்கும் நேரம் ஏதும் இல்லாமல் நிகழ்நேரத்திலேயே கணக்கீடு ஏதும் இன்றி பரிவர்த்தனை நடைபெறும் முறை எது?

A) RTGS (ஆர்.டி.ஜி.எஸ்)
B) NEFT (நெ.ஃப்ட்)
C) A & B
D) ஏதுமில்லை

68) நெ.ஃப்ட் முறை பரிமாற்றத்தில் குறைந்த பட்ச அனுப்பு தொகைவு எவ்வளவு?

A) ஆயிரம் ரூபாய்
B) ஒரு லட்ச ரூபாய்
C) ஒரு ரூபாய்
D) குறைந்தபட்ச அளவு கிடையாது

69) தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் அணுமின் நிலையங்கள் அமைத்து தொழில் வளர்ச்சியை ஒருங்கிணைப்பதற்கு அழுத்தம் கொடுத்த தொழிற்கொள்கை தீர்மானம் எது?

A) 1948 தீர்மானம்
B) 1956 தீர்மானம்
C) 1991 தீர்மானம்
D) 1980 தீர்மானம்

70) தொழிற்கொள்கை 1980 ______ ராஜ்ஜியத்திலிருந்து பெரிய தொழில்களை விடுவிப்பதை நோக்கமாக கொண்டிருந்தது.

A) லைசன்ஸ் ராஜ்ஜியம்
B) தனியார் ராஜ்ஜியம்
C) பண ராஜ்ஜியம்
D) படை ராஜ்ஜியம்

71) "ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும்" - என்ற விதி எது?

A) சமத்துவ விதி
B) உறுதி விதி
C) நெகிழ்ச்சி விதி
D) வசதி விதி

ETW ACADEMY

72) நேர்முக வரி என்பது “யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும். வரி செலுத்துபவரே வரிச்சுமையை ஏற்க வேண்டும்” - என்றவர் யார்?

A) பேராசிரியர் ஜே.எஸ்.மில் B) பேராசிரியர் செலிக்மேன்

C) பேராசிரியர் சி.என்.ஆர் ராவ் D) கீன்ஸ்

73) பின்வருவனவற்றுள் நேர்முக வரி அல்லாதது எது?

A) வருமான வரி B) சொத்து வரி (அ) செல்வ வரி

C) ஜி.எஸ்.டி வரி D) நிறுவன வரி

74) இந்தியாவின் முக்கிய மறைமுக வரிகள் எவை?

1. சுங்க வரி
2. GST
3. கலால் வரி
4. இறக்குமதி வரி

A) 1 & 2 B) 2 & 3 C) 3 & 4 D) அனைத்தும்

75) 50 கோடிக்குள் வருமானம் ஈட்டும் இந்திய நிறுவனங்கள் செலுத்த வேண்டிய நிறுவன வரி எவ்வளவு?

A) 30% B) 25% C) 15% D) 40%

76) விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரி எது?

A) முத்திரைத்தாள் வரி B) சுங்கத் தீர்வை (அ) கலால் வரி

C) பண்டங்கள் வரி D) மேற்கண்ட அனைத்தும்

77) பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் குறிக்கோள் வாக்கியம் எது?

A) ஒரே வரி B) ஒரே நாடு - ஒரே வரி

C) ஒரே அங்காடி - ஒரே வரி D) ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி

78) ”சூரியன், தான் பூமியிடமிருந்து உறிஞ்சிய ஈரப்பதத்தைப் பன்மடங்கு திருப்பித் தருகிறது. அதுபோல, மன்னன் தன் குடிமக்களிடம் வரி வசூலித்து, அவர்களின் நலத்திற்காகவே மீண்டும் செலவு செய்கிறான்.” - என்றவர் யார்?

A) சாணக்கியர் B) திருவள்ளுவர் C) காளிதாசர் D) கம்பர்

79) பின்வரும் எந்தச் சட்டத்தின் கீழ், ‘நேர்முக வரிகளுக்கான மத்திய வருவாய் வாரியம்‘ என்னும் பெயரில் தனி வாரியம் (CBDT) ஒன்று நிறுவப்பட்டுள்ளது?

A) கருப்பு பணம்மற்றும் வரி விதித்தல் சட்டம், 2015 B) மத்திய வருமானச் சட்டம், 1963

C) நிதிச் சட்டம், 2015 D) சுத்தமான பணச்செயல்பாடு, 2017

80) தூய்மை பாரத வரி தொடங்கப்பட்டது எப்போது?

A) நவம்பர் 15, 2015 B) அக்டோபர் 2, 2015

C) அக்டோபர் 2, 2016 D) நவம்பர் 15, 2016

ETW ACADEMY

81) இந்தியாவில் அனைத்து நுகர்வோரும் செலுத்தும் வரி எது?

A) நேர்முக வரி B) மறைமுக வரி C) சொத்து வரி D) வருமான வரி

82) மறைமுக வரிகள் எப்போதும் எந்த வீதத்தில் அமையும்?

A) வளர்வீதம் B) விகிதாச்சார விகிதம் C) A & B D) தேய்வுவீதம்

83) முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் மிதமான 4% வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்ததால், பொருளாதார நிபுநர்கள் இந்த வளர்ச்சி விகிதத்தை எவ்வாறு அழைத்தனர்?

A) காலனிய விடுதலை வளர்ச்சி விகிதம் B) மௌன வளர்ச்சி விகிதம்

C) இந்து வளர்ச்சி விகிதம் D) மித வளர்ச்சி விகிதம்

84) இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட திட்டக் காலம் என்ன?

A) 6வது ஐந்தாண்டுத் திட்டம் B) 8வது ஐந்தாண்டுத் திட்டம்

C) 9வது ஐந்தாண்டுத் திட்டம் D) 10வது ஐந்தாண்டுத் திட்டம்

85) பின்வருவனவற்றுள் இந்தியப் பொருளாதாரத்தின் பண்பு எது?

A) வேலை வாய்ப்புள்ள வளர்ச்சி B) வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி

C) மித வேலை வாய்ப்புள்ள வளர்ச்சி D) சராசரி வேலை வாய்ப்புள்ள வளர்ச்சி

86) பின்வரும் வாக்கியங்களில் தவறானது எது?

A) உலகின் புவிப்பரப்பில் இந்தியா 2.4 சதவீத பரப்பைக் கொண்டுள்ளது

B) உலக வருவாயில் இந்தியா 1.2% வருவாயைப் பெற்றுள்ளது

C) உலக மக்கள் தொகையில் இந்தியா 16.5 சதவீதத்தைக் கொண்டுள்ளது

D) ஏதுமில்லை

87) 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மிக அதிக அளவு (9.2%) & மிகக் குறைந்த அளவு (6.3%) இறப்பு விகிதங்களைக் கொண்டுள்ள மாநிலங்கள் முறையே எவை?

A) பீகார் & ஹரியானா B) குஜராத் & மேகாலயா

C) ஒரிசா & மேற்கு வங்கம் D) நாகாலாந்து & மணிப்பூர்

88) திட்டமிடுதல் என்பது பின்வரும் எதனோடு தொடர்புடையது

A) வேளாண் வளர்ச்சி B) ஒட்டுமொத்த வளர்ச்சி

C) தொழில்மயமாதலோடு D) உலகமயமாக்கல்

89) 1923 இல் லண்டன் பொருளாதாரப் பள்ளி பின்வரும் எந்த ஆய்வுக்கட்டுரையை ஏற்று அம்பேத்கருக்கு டிஎஸ்சி பட்டம் வழங்கியது

A) இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்

B) ரூபாயின் பிரச்சனைகள்

C) பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதிகளின் மதிப்பீடு

D) ஒப்படைப்பு வரவு செலவுத்திட்டம்

ETW ACADEMY

**90)** உப்பு சத்தியாக்கிரகத்தின் போது குமரப்பா எந்தப் பத்திரிகையில் பணியாற்றினார்

A) காமன் வீல் B) நவஜீவன் C) ஹறிஜன் D) யங் இந்தியா

**91)** இந்தியாவில் தனிநபர் வருமானம் குறைவிற்கும் தனிநபர் ஊட்டச்சத்து குறைவிற்குமான காரணங்களை 1938இல் ராவ் தனது எந்த சிறு புத்தகத்தில் விளக்குகிறார்

A) இந்திய பொருளியல் வாழ்வில் என்ன தவறு

B) உலக பொருளியல் வாழ்வில என்ன தவறு

C) ஆசிய பொருளியல் வாழ்வில் என்ன தவறு

D) சுதந்திர பொருளியல் வாழ்வில் என்ன தவறு

**92)** மூலதன செறிவு நுட்ப முறையில் உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று தனது எந்த புத்தகத்தில் சென் குறிப்பிடுகிறார்

A) பணவீக்கம் மற்றும் பணவாட்டம் B) தொழில்நுட்ப தெரிவு

C) ரூபாய் மதிப்பிழப்பு D) நாடுகளின் வறுமை

**93)** இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு முதன் முதலாக அமைக்கப்பட்டவைகளில் ஒன்றான தேசிய வேதியியல் ஆய்வகம் எங்கு உள்ளது

A) புதுடில்லி B) ஹைதராபாத் C) புனே D) பம்பாய்

**94)** கீழ்க்காணும் எந்த முறையில் கிராம மக்களாலானக் குழுவினர் நிலச்சொந்தக்காரர்களாக இருந்து நிர்வாகம் செய்தனர்?

A) ஜமீன்தாரி முறை B) மஹல்வாரி முறை

C) இரயத்துவாரி முறை D) இவை எதுவும் அல்ல

**95)** இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை முதன் முதலில் எந்த மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்டது?

A) ஆந்திரா B) தமிழ்நாடு C) மகாராஷ்டிரம் D) பஞ்சாப்

**96)** வட்டார ஊரக வங்கிகளுக்கான மூலதனத்தில் மைய அரசின் பங்கு எவ்வளவு?

A) 15% B) 35% C) 50% D) 40%

**97)** இந்திய தொழில் நிதிக் கழகம் எதன் மூலம் தோற்றுவிக்கப்பட்டது?

A) பாராளுமன்ற சட்டப்படி B) குடியரசுத்தலைவரின் பரிந்துரைப்படி

C) அமைச்சரவை தீர்மானத்தின்படி D) அரசியலமைப்பின்படி

**98)** இந்திய தொழில் நிதிக் கழகம் எப்போது தோற்றுவிக்கப்பட்டது?

A) 1956 ஏப்ரல் 1 B) 1953 ஆகஸ்டு 1 C) 1986 ஜூன் 1 D) 1948 ஜூலை 1

**99)** 2019-20 பட்ஜெட்டின் படி, அரசுக்கு வரும் ஒரு ரூபாய் வருமானத்தில், பண்டங்கள் மற்றும் பணிகள் வரி மூலமாக வரும் வருவாய் எவ்வளவு?

A) 17 பைசா B) 19 பைசா C) 21 பைசா D) 8 பைசா

ETW ACADEMY

100) இந்தியாவில் அரசாங்கத்தினால் எத்தனை அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது?

A) ஒரே அடுக்கில் B) இரண்டு அடுக்குகளில்

C) மூன்று அடுக்குகளில் D) நான்கு அடுக்குகளில்

101) இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் யாரால் வசூலிக்கப்படுகின்றன?

A) மத்திய அரசால் B) மாநில அரசால் C) உள்ளாட்சி அமைப்பால் D) A & B

102) விகித வரி விதிப்பு முறையில், வரி செலுத்துவோரும், தங்கள் வருமானத்தில் ________ விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர்.

A) ஒரே விகிதத்தில் B) மாறுபட்ட விகிதத்தில்

C) இருவேறுபட்ட விகிதத்தில் D) மேற்கண்ட எதுவுமில்லை

103) பண மோசடி சட்டம் 2002 மூலம் 2015இல் உருவாக்கப்பட்ட சட்டம்?

A) பண அளிப்புச் சட்டம், 2015 B) பண அளவைச் சட்டம், 2015

C) நிதிக் கட்டுப்பாட்டுச் சட்டம், 2015 D) நிதிச் சட்டம், 2015

104) ரியல் எஸ்டேட் (ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 2012 B) 2014 C) 2015 D) 2016

105) அனைத்து வகையான வரிச் சேவைகளுக்கும் பொருந்தக்கூடிய தூய்மை பாரத வரியின் வரி விகிதம் எவ்வளவு?

A) 1.5 % B) 1 % C) 0.5 % D) 2 %

106) தற்போது அனைத்து விவசாய கடன்களுக்கான தலைமை அமைப்பாக செயல்பட்டு வருவது எது?

A) நபார்டு வங்கி B) வட்டார ஊரக வங்கி

C) இந்திய தொழில் கடன் வங்கி D) இந்திய ரிசர்வ் வங்கி

107) ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) B) நிகர தேசிய உற்பத்தி (NNP)

C) மொத்த தேசிய உற்பத்தி (GNP) D) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

108) **கூற்று:** தனிநபர் வருமானம் தேசிய வருமானத்திற்கு சமமாக இருக்காது

**காரணம்** தனிநபர் வருமானத்தோடு மாற்று செலுத்துதல்கள் சேர்க்கப்படுகிறது மற்றும் அரசிடம் இருந்து கிடைத்த ஓய்வு ஊதியம் தனி நபர் வருமானத்துடன் சேர்க்கப்படுகிறது?

A) கூற்றும் காரணமும் சரி மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

B) கூற்று சரி; காரணம் தவறு C) கூற்று தவறு; காரணம் சரி

D) கூற்றும் காரணமும் தவறு

109) பின்வருவனவற்றுள், எந்த ஆண்டுகளுக்கிடையே, மூன்று ஓராண்டுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன?

A) 1964 – 1967 B) 1965 – 1968 C) 966 – 1969 D) 1967 - 1970

ETW ACADEMY

**110)** பொருத்துக:

(i) 1வது ஐந்தாண்டுத் திட்டம் - 1) 4.4 % ஐ விட அதிகமாக 4.8 % வளர்ச்சி & வெற்றி

(ii) 2வது ஐந்தாண்டுத் திட்டம் - 2) 3.6 % இலக்கை விட அதிக வளர்ச்சி & வெற்றி

(iii) 3வது ஐந்தாண்டுத் திட்டம் - 3) 4.1 % வளர்ச்சி & வெற்றி

(iv) 4வது ஐந்தாண்டுத் திட்டம் - 4) 5.6 % வளர்ச்சியை அடையமுடியாமல் தோல்வி

(v) 5வது ஐந்தாண்டுத் திட்டம் - 5) 5.7 % வளர்ச்சியை அடையமுடியாமல் தோல்வி

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 4 | 3 | 2 | 5 | 1 |
| C) | 2 | 3 | 5 | 1 | 4 |
| D) | 5 | 3 | 1 | 2 | 4 |

**111)** IMF இன் அக்டோபர் 2016 அறிக்கையின்படி, தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எவ்வளவு?

A) 5% B) 7% C) 11% D) 13%

**112)** மாநில அரசின் பொறுப்பில் இருந்த கல்வி எந்த ஆண்டு முதல் மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பில் வந்தது

A) 1972 B) 1974 C) 1975 D) 1976

**113)** இந்தியாவில் மொத்தம் எத்தனை வேளாண்மை பல்கலைக்கழகங்கள் உள்ளன

A) 37 B) 47 C) 57 D) 67

**114)** வாஸ்கோடகாமா இந்தியாவில் உள்ள கோழிக்கோடுக்கு எந்த ஆண்டு வருகை புரிந்தார்?

A) மே 20, 1498 B) மே 22, 1498 C) மே 24, 1498 D) மே 26, 1498

**115)** தொழில் மூலதனக் காலம் எது?

A) 1858 முதல் 1901 வரை B) 1813 முதல் 1858 வரை

C) 1813 முதல் 1901 வரை D) 1858 முதல் 1935 வரை

**116)** மனித மேம்பாட்டு குறியீடு என்பதனை உருவாக்கியவர்கள் கீழ்காணும் எந்த நாட்டை சேர்ந்தவர் ஆவர்?

I) இந்தியா

II) பாகிஸ்தான்

III) ரஷ்யா

A) I, II மட்டும் B) I, III மட்டும்

C) II, III மட்டும் D) இவை அனைத்தும்

**117)** விவசாயிகள் கடனுக்காக முறைசாரா வங்கிகளை சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக துவங்கப்பட்ட திட்டம் எது?

A) கிசான் கிரெடிட் கார்ட் (KCC) B) கிசான் டெபிட் கார்ட் (KDC)

C) கிசான் ஹோல்டர் கார்ட் (KHC) D) கிசான் கிருபா கார்ட் (KKC)

ETW ACADEMY

118) ஏற்றுமதி செயலாக்க மண்டல மாதிரிகளின் (Export Processing Zone – EPZ) பயன்பாட்டை உணர்ந்த நாடுகளில் முதன்மையான நாடு எது?

A) அமெரிக்கா B) பிரிட்டன் C) இந்தியா D) ரஷ்யா

119) திட்டக்காலம் துவங்கிய நாள் எது?

A) ஏப்ரல் 1, 1951 B) ஏப்ரல் 1, 1950 C) மார்ச் 16, 1951 D) மார்ச் 16, 1950

120) கூட்டாட்சி நிதி முறையில், ஓர் ஆண்டில் எத்தனை முறைக்கு மேல் ஒருவரும் வரி விதிப்பிற்குட்படுத்தக் கூடாது?

A) 1 B) 2 C) 3 D) 4

121) முதலாவது நிதிக்குழுவின் தலைவர் யார்?

A) K. C. நியோகி B) K. சந்தானம் C) A. K. சந்தா D) P. V. ராஜமன்னார்

122) சந்தை விதியை உலகிற்களித்தவர் யார்?

A) J.M. கீன்ஸ் B) J.B. சே

C) காரல் மார்க்ஸ் D) லயனஸ் ராபின்ஸ்

123) ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு என்ன பெயர்?

A) தொழில்நுட்ப வேலையின்மை B) பருவகால வேலையின்மை

C) கற்றோர் வேலையின்மை D) வாணிபச்சுழல் வேலையின்மை

124) ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய பண்புகள் எவை?

1. ஊரகம் ஒரு நிறுவனம்

2. வேளாண்மையை சார்ந்திருத்தல்

3. வாழ்க்கை முறை மிக எளிமையானது.

4. மக்கள்தொகை அடர்த்தி அதிகம்

A) 1, 2 & 3 B) 2, 3 & 4 C) 1, 3 & 4 D) 1, 2 & 4

125) கிராமங்கள் காலியாகவும் மறுபுறம் நகரங்கள் நெரிசலாகவும் உள்ளன. இந்நிலையை "இரட்டை நஞ்சாக்கல்" என குறிப்பிடுபவர் யார்?

A) பாடிஸ்டா B) அலெஸ்டர் C) சுமாச்சர் D) டெரிக்

126) 1770 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இந்தியாவின் முதல் வங்கி எது?

A) ஹிந்துஸ்தான் வங்கி B) விக்டோரியா வங்கி

C) லூயீஸ் வங்கி D) இம்பீரியல் வங்கி

127) இந்திய இம்பீரியல் வங்கி 1955-ஆம் ஆண்டில் எவ்வாறாக மாற்றப்பட்டது?

A) யூனியன் வங்கி

B) இந்திய ரிசர்வ் வங்கி

C) இந்திய ஸ்டேட் வங்கி

D) பஞ்சாப் நேஷனல் வங்கி

ETW ACADEMY

128) இந்தியாவில் பயோ மெட்ரிக் முறையில் அறிந்து பணம் வழங்கும் முறைகள் எந்த வங்கியின் ஏ.டி.எம் இயந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது?

A) பைக்கனர் ஸ்டேட் வங்கி
B) பரோடா வங்கி
C) கத்தார் தேசிய வங்கி
D) ஹைதராபாத் தேசிய வங்கி

129) ஐந்து இணை வங்கிகளுடன் பாரதிய மகிளா வங்கியும் இணைக்கப்பட்டு, பாரத ஸ்டேட் வங்கியாக எந்த நாள் முதல் செயல்படத் தொடங்கியது?

A) ஏப்ரல் 1, 2017
B) மே 1, 2016
C) ஆகஸ்ட் 15, 2018
D) மார்ச் 31, 2015

130) தற்போது உலக வர்த்தகத்தில் 3% மாக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020க்குள், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015-2020) எத்தனை மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

A) 1.5 மடங்கு
B) 2 மடங்கு
C) 2.5 மடங்கு
D) 3 மடங்கு

131) இந்திய திட்ட ஆணையம் எதன் மூலம் கொண்டுவரப்பட்டது?

A) குடியரசு தலைவரின் அவசர ஆணையின் மூலம்
B) இந்திய அரசுத் தீர்மானத்தின் மூலம்
C) A & B
D) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை மூலம்

132) நிதி ஆயோக் ஆனது, சிறந்த நிர்வாகமான எத்தனை தூண்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது?

A) 5
B) 8
C) 9
D) 7

133) நிதி ஆயோக்கின் முதலாவது துணைத்தலைவராக செயல்பட்டு வருபவர் யார்?

A) அரவிந்த் பனகரியா
B) அசோக் அலுவாலியா
C) ஆனந்த் சர்மா
D) வீரேந்திர சிங்

134) 1944இல் ஸ்ரீமன் நாராயண அகர்வால் _______ திட்டம் ஒன்றை முன்மொழிந்தார்.

A) சுதேசி திட்டம்
B) சர்வோதய திட்டம்
C) காந்திய திட்டம்
D) சோசலிச திட்டம்

135) பொருளாதார திட்டமிடுதல்

I) தனியார் முயற்சியை வரவேற்கிறது

II) தேர்ந்தெடுத்தலின் உரிமையை முடக்குகிறது

III) நிர்வாகச் செலவு அதிகரிக்கவும், தானாகவே விலை நிர்ணய முறையை சரிசெய்வதை நிறுத்தவும் செய்கிறது

A) I & II
B) II & III
C) I & III
D) மேற்கண்ட அனைத்தும்

136) பின்வரும் எந்த திட்டமிடுதலில், "மானியம்" போன்ற சலுகைகள் கொடுத்து ஒரு பொருளை உற்பத்தி செய்யவைக்க முடியும்?

A) குறுகிய கால திட்டமிடல்
B) தூண்டும் திட்டமிடல்
C) சுட்டிக்காட்டும் திட்டமிடல்
D) கட்டாயமானத் திட்டமிடல்

ETW ACADEMY

**137)** ஐந்தாண்டுத் திட்டங்கள் என்பவை பின்வரும் எவ்வகையைச் சேர்ந்தது?

A) நீண்டகால திட்டமிடல்
B) நடுத்தரகால திட்டமிடல்
C) முன்னோக்கு திட்டங்கள்
D) இவற்றுள் ஏதுமில்லை

**138)** நிதி ஆயோக்கின் பணி எது (வை)?

I) அரசுத் துறைகளில் திறனை வளர்த்தல் & உலக அளவில் தொழில் நுட்பத்தை மேம்படுத்தல்

II) அரசு செயல்படுத்தும் திட்டங்களை கண்காணித்து அதன் விளைவுகளை மதிப்பீடு செய்தல்

III) மாநிலங்களை வரிசைப்படுத்தி போட்டியடிப்படையிலான கூட்டாட்சி உணர்வை வளர்த்தல்

A) I & II
B) II & III
C) I & III
D) மேற்கண்ட அனைத்தும்

**139)** பின்வருவனவற்றுள் மத்திய அரசிற்கு வருமானம் தரும் வழி அல்லாதது எது?

A) தொழில் நிறுவனங்கள் மீதான வரி
B) பணம், நாணயங்கள் மற்றும் அந்நிய செலவாணி
C) சுங்க வரி & ஏற்றுமதி வரி
D) மது மற்றும் போதைப் பொருட்கல் மீதான கலால் வரி

**140)** நிதிக்குழுக்களின் பணிகளைப் பற்றிக் கூறும் அரசியலமைப்பு ஷரத்து எது?

A) 280 (1)
B) 280 (2)
C) 280 (3)
D) 280 (4)

**141)** இந்திய மருத்துவ கழகத்திற்கு தேசிய மருத்துவ வாரியம் என பெயர் மாற்றம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த அமைப்பு எது?

A) இந்திய மருத்துவக் கழகம்
B) அகில இந்திய மருத்துவர் கூட்டமைப்பு
C) நிதி ஆயோக்
D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

**142)** "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கிறதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்றவர் யார்?

A) J.M. கீன்ஸ்
B) J.B. சே
C) லர்னர்
D) பிட்ஸ் பாரீஸ்டர்

**143)** மறைமுக வேலையின்மையில்

A) தேவைக்கு குறைவானவர்கள் ஒரு வேலையில் இருப்பர்
B) தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருப்பர்
C) தேவைப்படும் எண்ணிக்கையில் தொழிலாளர்கள் ஒரு வேலையில் இருப்பர்
D) மேற்கண்ட அனைத்தும்

**144)** நாட்டு மக்களில் வேலையில் இருப்பவர்கள் மற்றும் வேலை செய்யும் திறன் பெற்ற நபர்கள் ஆகியோர் கூட்டாக சேர்த்து எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

A) உழைப்பாளர் குடும்பம்
B) உழைப்பாளர் குழு
C) உழைப்பாளர் வர்க்கம்
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

145) 1972-73 ஆம் ஆண்டுகளில் தொடங்கி கடந்த நான்கு பத்தாண்டுகளில் வேலை வாய்ப்பு வளர்ச்சி, சராசரியாக எத்தனை சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது?

A) 3.5 % B) 4.2 % C) 5% D) 2%

146) பின்வருவனவற்றுள் பொதுத்துறை நிறுவனம் அல்லாதது எது?

A) டாடா இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை B) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்

C) இந்திய உருக்கு ஆணையம் D) பாரத தொலைபேசி நிறுவனம்

147) தற்போதைய வளர்ச்சி வகை முறை அபாயகரமானது என்று சுமார்ச்சர் அவர்கள் தமது எந்த நூலில் விளக்குகிறார்?

A) பெரியது அழகில்லை B) சிறியது அழகு

C) இடம்பெயராமை அழகு D) பெரிய அசுத்தம்

148) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JRY) - தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1983 B) 1986 C) 1989 D) 2002

149) பொருத்துக:

(i) பாரத் நிர்மான் யோஜனா - 1. 2005

(ii) இந்திரா ஆவாஸ் யோஜனா - 2. 1985-1986

(iii) ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) - 3. 2009

(iv) தேசிய உணவுப் பாதுகாப்புத்திட்டம் - 4. 2013

(v) தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் - 5. 2011

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 2 | 1 | 5 | 3 | 4 |
| C) | 5 | 4 | 2 | 3 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 | 5 |

150) 2016, அக்டோபர் 4, நிலவரப்படி, ஊரக வேலையின்மை எத்தனை சதவீதமாகும்?

A) 10.1% B) 8.5% C) 7.8% D) 9.4%

151) தற்போது இந்தியாவில் எத்தனை வட்டார ஊரக வங்கிகள் உள்ளன?

A) 58 B) 62 C) 64 D) 78

152) 2006இல் NABARDன் SHG வங்கி இணைப்பு திட்டத்தில் வெற்றிகரமாக செயல்பட்டுள்ள மாநிலங்கள் எவை?

A) ஆந்திரா

B) தமிழ்நாடு

C) கேரளா & கர்நாடகா

D) மேற்கண்ட அனைத்தும்

153) தேசிய ஊரக நல அமைப்பு (NRHM) எப்போது தொடங்கப்பட்டது?

A) 12 ஏப்ரல், 2008 B) 12 ஏப்ரல், 2007 C) 12 ஏப்ரல், 2005 D) 12 ஏப்ரல், 2006

154) வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) பொதுப் பயன்பாட்டு பணிகள் B) அடிப்படைப் பணிகள்

C) சேவைப் பணிகள் D) முகமை பணிகள்

155) சிறந்த எழுத்தாளரான VKRV ராவ் அவர்கள் மூன்று முக்கிய கருத்துக்களில் ஆர்வமுடையவராக இருந்தார். அதில் சேராதது எது

A) தேசிய வருமானம்

B) சுற்றுச்சூழலியல் மற்றும் கிராமப் பொருளாதாரம்

C) உணவு, ஊட்டச்சத்து மற்றும் பண்டங்களின் பகிர்வு

D) வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பகிர்வு

156) ஜே ஆர் டி டாடா மற்றும் மைசூர் மகாராஜா ஆகியோரின் நிதி உதவியில் பெங்களூருவில் இந்திய அறிவியல் நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு என்ன

A) 1889 B) 1909 C) 1919 D) 1925

157) வருமான பகிர்வு மற்றும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் நுகர்வு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது யாருடைய முக்கிய கருத்து

A) ரகுராம் ராஜன் B) மன்மோகன் சிங் C) அமர்த்தியாசென் D) கரியப்பா

158) கீழ்காணும் வினாக்களின் அடிப்படையில் சுதந்திரத்திற்கு முன் மூன்றுவிதமான நிலவுடைமை முறைகள் இருந்தன.அவற்றில் சேராதது எது

அ) நிலம் யாருக்கு சொந்தமானது?

ஆ) நிலத்தில் யார் அறுவடை செய்வது?

இ) நில வருவாய் அரசுக்கு செலுத்துவதற்கு பொறுப்பானவர் யார்?

A) ஜமீன்தாரி முறை B) மகல்வாரி முறை

C) ரயத்துவாரி முறை D) வாரிசுரிமை முறை

159) கீழ்க்காணும் எந்த முறையில் நிலத்தை சொந்தம் கொண்டாடும் உரிமை, நிலத்துக்கான கட்டுப்பாடு போன்றவை நில உரிமையாளரிடம் இருந்தது?

A) ஜமீன்தாரி முறை B) மஹல்வாரி முறை

C) இரயத்துவாரி முறை D) இவை எதுவும் இல்லை

160) 1956 தொழிற்கொள்கை தீர்மானம் பின்வரும் யாருடைய வளர்ச்சி மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

A) ஜெவகர்லால் நேரு B) ஜே.சி. குமரப்பா

C) எம்.எஸ். சுவாமிநாதன் D) மகலநோபிஸ்

161) உலக அளவில் இந்தியா கச்சா சணல் உற்பத்தியிலும் சணல் பொருட்கள் தயாரிப்பிலும் எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாமிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

162) தாராளமயமாக்குதலின் அம்சங்களில் சரியானவை எவை?

I) உரிமங்கள், கட்டுப்பாடுகள், நெறிப்படுத்துதல் ஆகியவற்றை தீவிரப்படுத்துதல்

II) சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்குதல்

III) தொழில்துறைக்கு நிதி நிறுவனங்களின் அதிக பங்களிப்பு

A) I & III
B) I & II
C) II & III
D) மேற்கண்ட அனைத்தும்

163) உள்நாட்டுப் (இந்தியா) பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது?

A) தாராளமயமாக்கல்
B) முற்றுரிமையாக்கல்
C) உலகமயமாக்கல்
D) மத்தியமயமாக்கல்

164) பன்னாட்டு பண நிதியத்தின் (IMF) கணிப்புப்படி, 2016ல் நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் உலக மொத்த GDP மதிப்பில் இந்தியாவின் பங்கு எத்தனை சதவீதம்?

A) 2.99 %
B) 4.88 %
C) 6.33 %
D) 1.77 %

165) கிசான் கிரெடிட் கார்ட் என்பது இந்திய மைய வங்கி மற்றும் “விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி" ஆகியவற்றால் எப்போது தொடங்கப்பட்டது?

A) 1994
B) 1996
C) 1998
D) 2000

166) தாராளமயமாக்கல் கொள்கைகள், பூச்சிக்கொல்லி மற்றும் உர மானியத்தைக் குறைத்து விட்டதால் உரங்களின் விலைகள் எத்தனை சதவீதம் அதிகரித்தன?

A) 50 %
B) 150 %
C) 200 %
D) 300 %

167) ”பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்”. - என்றவர் யார்?

A) ஆடம் ஸ்மித்
B) ஜே.எம். கீன்ஸ்
C) காரல் மார்க்ஸ்
D) டால்ட்டன்

168) 1938இல் நடைபெற்ற அனைத்து இந்திய காங்கிரசு கமிட்டி கூட்டத்தில் யாருடைய முயற்சியால் தேசியத் திட்டக்குழு உருவாக்கப்பட்டது?

A) ஜவகர்லால் நேரு
B) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
C) மகாத்மா காந்தி
D) சர்தார் வல்லபாய் பட்டேல்

169) திட்ட ஆணையத்தின் பணி அல்லாதது எது?

A) நாட்டின் எதிர்கால வளர்ச்சி தேவைகளுக்கும் பயன்படும் வகையில் தேசிய மூலவளங்களை மதிப்பீடு செய்வது

B) மூலவளங்களை மிகுந்த திறனுடனும் சமநிலைத் தவறாமலும் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பது

C) திட்டங்களை ஒவ்வொரு கட்டமாக நிறைவேற்றி முழுமைப்படுத்துவது. வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் சூழ்நிலைகளை அடையாளம் காண வேண்டியது ஆணையத்தின் பொறுப்பு ஆகும்.

D) இந்திய அரசின் ஆண்டு வரவு செலவு அறிக்கையை தயார்செய்வது.

ETW ACADEMY

**170)** பின்வரும் வாக்கியங்களில் சரியானவை எவை?

1. வருமான வரியில் நிறுவனங்கள் மீதான வரி உள்ளடக்கப்படவில்லை.
2. வருமான வரி மாநகராட்சி வரியை உள்ளடக்கியது
3. நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமான வரி மத்திய மற்றும் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

A) 1 & 2
B) 2 & 3
C) 1 & 3
D) மேற்கண்ட அனைத்தும்

**171)** 1776ஆம் ஆண்டு "நாடுகளின் செல்வம் பற்றிய இயல்பு மற்றும் காரணங்கள்" என்ற புத்தகத்தை வெளியிட்டவர் யார்?

A) ஆடம் ஸ்மித்
B) J.M. கீன்ஸ்
C) லயனஸ் ராபின்ஸ்
D) J.B. சேய்

**172)** "அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் சேயின் விதி செயல்படாது" என்று கூறியவர் யார்?

A) கீன்ஸ்
B) சாமுவெல்சன்
C) ஆடம் ஸ்மித்
D) காரல் மார்க்ஸ்

**173)** நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக உள்ள புத்தகமான "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" என்ற நூலை எழுதியவர் யார்?

A) கீன்ஸ்
B) சாமுவெல்சன்
C) ஆடம் ஸ்மித்
D) காரல் மார்க்ஸ்

**174)** இந்தியாவில் பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாக வகைபடுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சேராதது எது?

A) விவசாயத் துறை
B) பண்டங்கள் துறை
C) தொழில் துறை
D) சார்புத் துறை அல்லது சேவைத் துறை

**175)** இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உழைப்பாளர் குழுவின் பெரும்பகுதியினர் எந்தத்துறையில் இருப்பர்?

A) முதன்மைத் துறை
B) இரண்டாம் துறை
C) மூன்றாம் துறை
D) மேற்கண்ட அனைத்தும்

**176)** இருவேல்பட்டு கிராமமானது எத்தனை ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது?

A) 50
B) 75
C) 100
D) 125

**177)** திட்டக்குழுவின் கணக்கீட்டின்படி 2009 - 2010ல் ஊரக பகுதியில் வறுமையில் உள்ள மக்கள் சதவீதம் என்ன?

A) 54.10 %
B) 44.10 %
C) 64.10 %
D) 48.10 %

ETW ACADEMY

**178)** ஊரக வறுமைக்கான காரணங்கள் எவை?

1. நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை
2. பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை
3. பொதுத்துறைகளில் அதிக முதலீடு
4. பணவீக்கம் & குறைந்த உற்பத்தித் திறன்

A) 1, 3 & 4 B) 1, 2 & 4
C) 1, 2 & 3 D) மேற்கண்ட அனைத்தும்

**179)** ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) மற்றும் தேதிய ஊரக நலத்திட்டம் ஆகியவை தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 2003 B) 2005 C) 2006 D) 2012

**180)** சிறு மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களை முன்னேற்றுவதற்கான அவசியத்தை எடுத்துக் கூறிய தொழில் கொள்கை தீர்மானங்கள் எவை?

A) 1948 & 1956 B) 1956 & 1977 C) 1980 & 1990 D) 1990 & 1991

**181)** வளர்ச்சி களால் ஏற்படும் வட்டார வேற்றுமையை குறைக்க பின்வரும் எந்த தொழிற்கொள்கை வலியுறுத்தியது

A) 1948 B) 1956 C) 1977 D) 1991

**182)** எஃகு துறையை மேம்படுத்தும் பொருட்டு, இந்திய எஃகு நிறுவனம் (SAIL) நிறுவப்பட்ட ஆண்டு என்ன?

A) 1948 B) 1956 C) 1974 D) 1982

**183)** தாராளமயமாக்கலின் எதிர்மறை விளைவுகள் எவை?

I) வேலையின்மை அதிகரிப்பு
II) வரி வரவு குறைவு
III) உள்நாட்டு உற்பத்தி குறைவு

A) I & III B) II & III
C) I & II D) மேற்கண்ட அனைத்தும்

**184)** பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) முதலீட்டு விலக்கல் (DISINVESTMENT)
B) முதலீட்டுக் கூட்டல் (PROINVESTMENT)
C) முதலீட்டுக் திருப்பல் (REVERSEMENT)
D) மேற்கண்ட எதுவுமில்லை

**185)** இந்தியப் பிரதமரால், புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்ட நாள்?

A) ஏப்ரல் 1, 1991 B) ஜனவரி 1, 1991
C) மே 1, 1991 D) ஜூலை 24, 1991

ETW ACADEMY

186) வேளாண்மை அல்லது தோட்டப்பயிர்கள் அல்லது கால்நடைப் பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு மாநில அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு எது?

A) விவசாய மற்றும் இதர பொருட்களுக்கான வாணிபக் குழு (APMC)

B) விவசாயப் போருட்களுக்கான அங்காடி குழு (APMC)

C) பால் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களுக்கான வாணிபக் குழு (MAPC)

D) இவற்றில் எதுவுமில்லை

187) இந்திய ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் (2015-2020) முதன்மை நோக்கம் எது?

A) ஏற்றுமதி சூழல்களை மேம்படுத்துதல் & உற்பத்தி அதிகரிப்பு

B) "இந்தியாவில் தயாரிப்பு" (Make in India) திட்டத்திற்கு ஆதரவளித்தல்

C) "மின்னனு இந்தியா" (Digital India) திட்டத்திற்கு ஆதரவளித்தல்

D) மேற்கண்ட அனைத்தும்

188) எம்.விஸ்வேஸ்வரய்யா, "இந்தியாவுக்கான திட்டமிட்ட பொருளாதாரம்" என்னும் புத்தகத்தில் இந்தியாவுக்கான எத்தனை ஆண்டு திட்டம் ஒன்றினை முன்மொழிந்திருந்தார்?

A) 5 ஆண்டு திட்டம் B) 10 ஆண்டு திட்டம் C) 3 ஆண்டு திட்டம் D) 8 ஆண்டு திட்டம்

189) இந்திய தொழிலதிபர்களால் உருவாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சித்திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?

A) ஸ்ரீமன் நாராயண அகர்வால் B) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

C) ஹெச்.எஸ். டாங்கே D) எம்.என். ராய்

190) 1950இல் காந்தி மற்றும் வினோபா பாவே ஆகியோரின் கருத்துக்களின் உத்வேகத்தால், ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களால் முன்மொழியப்பட்ட திட்டம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) சுதேசி திட்டம் B) சர்வோதய திட்டம் C) காந்திய திட்டம் D) சோசலிச திட்டம்

191) திட்ட ஆணையம் யாரை உள்ளடக்கியது அல்ல?

A) பிரதமர்

B) நான்கு முழு நேர உறுப்பினர்கள்

C) கேபினட் அமைச்சர் நிலையிலுள்ள நான்கு பகுதி நேர உறுப்பினர்கள்

D) மாநில முதல்வர்களின் முகவர்கள்

192) "திட்டமிடல் சிறப்பாக அமையவேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை" என்பவர்?

A) ஜே.எம்.கீன்சு B) ஆடம் ஸ்மித் C) காரல் மார்க்ஸ் D) ஆர்தர் லூயிஸ்

193) இந்தியாவில் 2015- ஆம் ஆண்டில் 80 கோடி மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்களில் எத்தனை பேர் வறுமைகோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர்?

A) கால்பகுதி கிராமமக்கள் (22 கோடி மக்கள்)

B) முக்கால்பகுதி கிராமமக்கள் (63 கோடி மக்கள்)

C) அரைப்பகுதி கிராமமக்கள் (42 கோடி மக்கள்)

D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

**194)** தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (NREP) தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979 B) 1980 C) 1983 D) 1986

**195)** பின்வரும் எந்த ஆய்விற்விற்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்கன் மற்றும் கிறிஸ்டோர் பிசாரிட்ஸ் ஆகிய பொருளாதார அறிஞர்கள் 2010ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினை பகிர்ந்து கொண்டனர்?

A) பணிக்கான படிப்பு (Jobs Study)

B) வறுமைக்கான படிப்பு (Poverty Study)

C) வறுமை ஒழிப்பிற்கான படிப்பு (Poverty Alleviation Study)

D) மேற்கண்ட அனைத்தும்

**196)** வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks) செயல்படுத்தப்பட்ட ஆண்டு என்ன?

A) 1986 B) 1971 C) 1981 D) 1975

**197)** NABARD வங்கியின் கணக்கீட்டின்படி எத்தனை சுய உதவிக் குழுக்கள் இந்தியாவில் உள்ளன?

A) 2.2 மில்லியன் B) 1.2 மில்லியன் C) 2.8 மில்லியன் D) 1.8 மில்லியன்

**198)** பின்வரும் எந்த சட்டத்தின்படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கி தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்?

A) வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 21

B) வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 22

C) வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 23

D) வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 24

**199)** இந்திய ரிசர்வ் வங்கியானது, பின்வரும் எந்தச் சட்டத்தின்படி அந்நிய செலாவணி மேலாண்மையும், நிர்வகிப்பனையும் மேற்கொள்கிறது?

A) அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம், 2001

B) அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999

C) அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம், 1999

D) அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம், 2001

**200)** இந்திய ரிசர்வ் வங்கி, பின்வரும் எதன் வழியாக விவசாயத்திற்கான கடனை வழங்கி வந்தது?

A) ஓரடுக்கு முறை வழியாக B) ஈரடுக்கு முறை வழியாக

C) மூன்றடுக்கு முறை வழியாக D) நான்கடுக்கு முறை வழியாக

***

© ETW Academy